உயர்த்துகிறார். அவர்களை பிரபுக்களோடும் தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப் பண்ணுகிறார்' என்று சொன்னபடி என்னை அமைச்சராக்கி அழகு பார்க்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

இறைவனின் ஜனங்களைக் கொடுமைப்படுத்திய அரசன் பார்வோனிடமிருந்து மீட்டு வழிநடத்தி, "பாலும் தேனும் ஓடுகிற வளமான கானான் தேசத்துக்கு" வழிநடத்தி வந்த மோசே போல, தமிழ்நாட்டு மக்களைச் சுரண்டி, இரத்தத்தைக் குடித்த கொள்ளை ஆட்சியாளரிடமிருந்து தமிழ்நாட்டு மக்களை மீட்டு இன்று "பாலும் தேனும் ஓடும் கானான் தேசம் போன்ற", மக்கள் நல ஆட்சிக்கு அழைத்துவந்த எங்களின் இதய தெய்வமே! தமிழ்நாட்டின் சிறுபான்மை மக்களைச் சிதறடித்து, சுகம்கண்ட குள்ளநரிக் கூட்டமான திமுக. ஆட்சியின் கபட நாடகத்தை முறியடித்து சிறுபான்மை மக்களைக் காத்த எஸ்தராம் எங்கள் அன்னையே! இறை மக்களை கேலி பேசி, நிந்தித்து, பயமுறுத்தி வாழ்ந்த அரக்கன் கோலியாத்தை ஒரே ஒரு கல்லைக் கொண்டு நெற்றிப் பொட்டில் அடித்து வீழ்த்திய அரசன் தாவீது போல, தமிழ்நாட்டு ஜனங்களை கடந்த ஐந்தாண்டுக் காலம் பயமுறுத்தி சுகபோகமாக ஆண்ட ரௌடிக் கும்பலை, குடும்ப ஆட்சியை வீட்டிற்கு அனுப்பவேண்டாமா?" என்ற ஒரே சொல்லால் நெற்றிப் பொட்டில் அடித்து வீழ்த்திய எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) "காடு விளையட்டும் பெண்ணே, நமக்குக் காலம் இருக்குது பின்னே, பட்ட துயர் இனி மாற, இப்போ கிட்ட வருகுது நேரம்" என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப தமிழகம் இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்னான ஆட்சியில் உருவாவது திண்ணம்.

ஏழை மாணவர்களின் எதிர்கால கல்விக்கு நிதி வழங்கிய ஏழைகளின் இரட்சகரே, அன்னிய தொழில்முனைவோருடன் நட்பு ஏற்படுத்தி நாட்டில் தொழில் வளம் சிறக்கச் செய்யும் தொழிலாளர்களின் கலங்கரை விளக்கமே! "கல்லைக் கனியாக மாற்றும் தொழிலாளி கவலை ஒரு நாள் தீரும், அதில் நல்லவர் வாழும் புதிய சமுதாயம் நிச்சயம் ஒருநாள் மலரும்"